கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

முன்னிலை - திரு. S. ராஜசிம்மவர்மன், பி.ஏ., பி.எல் ( Hons),
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 தமிழ் விசுவாவசு ஆண்டு பங்குனி மாதம் 04 ம் நாள்

( முதல் நிலை பதிவேடு வழக்கு எண்.. 144/2025 )

( விழுப்புரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1)

( தாலுக்கா காவல் நிலைய குற்ற எண். 1473/2021)

**அமர்வு வழக்கு எண் . 296 /2025**

**(CNR NO. TNVP 01- 005830 - 2025 )**

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசுக்காக | - | காவல் ஆய்வாளர்,<br>தாலுக்கா காவல் நிலைய குற்ற எண். 1473/2021 |
| 2. | குற்றம்சாட்டவர் பெயர், வயது, வேலை, தந்தை பெயர் மற்றும் முகவரி | | செல்வம் ( வயது 48/2021)<br>த/பெ. மண்ணாங்கட்டி ,<br>துரையரசன் நகர், சாலாமேடு<br>விழுப்புரம் மாவட்டம். |
| 3. | சம்பவ நாள் | | 28.12.2021 |
| 4. | புகார் நாள் | | 28.12.2021 |
| 5. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 28.12.2021 |

| | | | |
|---|---|---|---|
| 6. | எதிரி பிணையில் சென்ற நாள் | : | 16.02.2022 |
| 7. | எதிரி மீதான குற்றச்சாட்டு | : | எதிரி மீது இதச பிரிவு . 328 உ/இ- 24(1) 6 COTPA Act 2003 . |
| 8. | எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | | எதிரி மீது இதச பிரிவு. 328 உ/இ- 24(1) 6 COTPA Act 2003 . |
| 9. | எதிரியின் பதில் | | குற்றவாளி அல்ல |
| 10 | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | | 12.01.2026 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | | 17.03.2026 |
| 12. | நீதிமன்றத்தின் தீர்மானம் | | எதிரி இதச பிரிவு .328 உ/இ- 24(1) COTPA Act 2003 கீழ் குற்றவாளி அல்ல . |
| 13. | நீதிமன்றத்தின் தீர்ப்பும் தண்டனையும், | - | முடிவாக, எதிரி மீது இதச. 328 உ/இ- 24(1) COTPA Act 2003 . கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு. 258 (1) (BNSS) ன் கீழ் |

| | | | |
|---|---|---|---|
| | | | விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். இவ்வழக்கில் எதிரிக்கு ஏற்பட்டுள்ள பிணைமுறிகள் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் இரத்தாகும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 14. | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்ட நாள் | | எதிரி விடுதலை செய்யப்பட்டதால், தீர்ப்பின் நகல் வழங்கப்படவில்லை. |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | | இல்லை |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக 17.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு.இரா.சுப்பராயலு அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. D. S. செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்,

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 28.12.2021 ம் தேதி 16.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கே. பரணிநாதன் என்பவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் விழுப்புரம் சாலாமேடு , துரையரசன் நகரில் கண்காணித்த போது எதிரி செல்வம்

அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் மதிமயக்க பொருட்களை மனித உயிருக்கும், உள்ளுறுப்புக்கும் தீங்கு விளைவிக்கும் என தெரிந்தே அவரது பெட்டிக்கடையில் Hans – 40 பாக்கெட்டுக்கள் Cool lip -20 பாக்கெட்டுக்கள் விற்பனைக்காக மறைத்து வைத்து குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியின் செய்கையானது இதச பிரிவு. 328 உ/இ- 24(1) , 6 COTPA Act , ன் விழுப்புரம் தாலுக்கா காவல் ஆய்வாளர் அவர்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலித்த வகையில், விழுப்புரம், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1 அவர்கள் இந்த வழக்கை முதல் நிலை பதிவேடு வழக்கு எண். 144 /2025 ஆக கோப்பிற்கு எடுத்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச. பிரிவு. 207 - ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கி, பிரிவு. COTPA Act - ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கக்கூடியது என்பதால், கு.வி.மு.ச. பிரிவு. 209 (அ) ன் படி இவ்வழக்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. விழுப்புரம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அந்நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண். 296 /2025 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்ற **D.No. 7808 /2025** நாள். **27.10.2025** தேதிய உத்தரவுபடி வழக்கு கோப்புகள் அனுப்பப்பட்டு 31.10.2025 அன்று இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளது.

3) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரி ஆஜரானவுடன், கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் இந்த அமர்வு வழக்கை கு.வி.மு.ச. பிரிவு . 226 ன் கீழ் திறப்பு செய்தார். இவ்வழக்கில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய அரசு தரப்பில் முக நோக்கு வழக்கு உள்ளது என முடிவு செய்து, எதிரியின் மீது இதச பிரிவுகள். 328 உ/இ- 24(1) 6 COTPA 2003 ன் படி குற்றச்சாட்டுக்கள் வனைந்து அவற்றின் சாராம்சத்தை எதிரிக்கு தமிழில் விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி அவற்றை மறுத்து அவர் குற்றவாளி அல்ல என்று தெரிவித்ததால் இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கவேண்டி அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருளான சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது .

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து 313(1) (ஆ) பிரிவின் கீழ் எதிரியிடம் விரிவாக விளக்கி வினவிய போது, எதிரி சாட்சியத்தை பொய் என மறுத்தார் . எதிரி தரப்பில் சாட்சிகள் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இருதரப்பும் கேட்கப்பட்டது.

**7) அரசு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களில் இருந்து தெரியவரும் அரசு தரப்பின் விவரங்கள் பின்வருமாறு :-**

(i) அ.சா. 1 திரு . தேவசேனா தனது சாட்சியத்தில், தான் தற்போது கண்டமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 28/12/2021ம் தேதி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக தான் பணிபுரிந்த போது, அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு தன்னுடன் பணி புரிந்த தலைமை காவலர் கருணாகரன், தாலுக்கா உதவி ஆய்வாளர் பரணிநாதன் ஆகியோர் சகிதம் விழுப்புரம் சாலாமேடு, துரை அரசன் நகர் பகுதியில், புகையிலை குட்கா பொருட்கள் தொடர்பாக கண்காணித்துக் கொண்டிருந்தபோது, செல்வம் என்பவரின் கடையில், அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வெள்ளை நிற சாக்கு பையில் அவரது கடைக்கு முன்பு வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார் என்றும், அவர் போலீசாராகிய தங்களை கண்டதும் ஓட முயற்சி செய்தார் என்றும், அவரைப் பிடித்து விசாரித்ததில் அவர் பெயர் செல்வம் வயது 48 த/பெ.மண்ணாங்கட்டி, துரை அரசன் நகர், சாலாமேடு, என்று சொன்னார் என்றும், அவர் அந்தப் பையில் 1)ஹான்ஸ் - 40 பாக்கெட்டுகள், Cool lip - 20 பாக்கெட்டுக்கள், சட்டவிரோதமாக வைத்திருந்தவரை 16-15 மணிக்கு, மேற்கண்ட காரணத்தை சொல்லி உதவி ஆய்வாளர் கைது செய்து, 16-30 மணிக்கு அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால், தங்களது முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் 2-வதாக சாட்சி கையெழுத்து செய்தேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 என்றும், அந்த கைப்பற்றுதல்

மகசரில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஹான்ஸ்-40 பாக்கெட்டுக்கள், Cool Lip-20 பாக்கெட்டுகள், ஆகியவை தன்னிடம் காண்பிக்கப்படுவது தான் என்றும், சாட்சி அதை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அந்த சான்று பொருட்கள் சா.பொ. 1 என்றும், பிறகு எதிரியை 17-30 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்தோம் என்றும், அதன்பிறகு அவரை நீதிமன்ற காவலுக்கு உதவி ஆய்வாளர் அனுப்புவதற்கு உதவி செய்தோம் என்றும், இது சம்பந்தமாக தன்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா,2 திரு.கருணாகரன் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 28/12/2021ம் தேதி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் தலைமை காவலராக தான் பணிபுரிந்த போது, அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு என்னுடன் பணி புரிந்த முதல்நிலை காவலர் தேவசேனா, தாலுக்கா உதவி ஆய்வாளர் பரணிநாதன் ஆகியோர் சகிதம் விழுப்புரம் சாலாமேடு, துரை அரசன் நகர் பகுதியில், புகையிலை குட்கா பொருட்கள் தொடர்பாக கண்காணித்துக் கொண்டிருந்தபோது, செல்வம் என்பவரின் கடையில், அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வெள்ளை நிற சாக்கு பையில் அவரது கடைக்கு முன்பு வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார் என்றும், அவர் போலீசாராகிய தங்களை கண்டதும் ஓட முயற்சி செய்தார் என்றும், அவரைப் பிடித்து விசாரித்ததில் அவர் பெயர் செல்வம் வயது 48 த/பெ.மண்ணாங்கட்டி, துரை அரசன் நகர், சாலாமேடு, என்று சொன்னார் என்றும், அவர் அந்தப் பையில் 1) ஹான்ஸ் - 40 பாக்கெட்டுகள், Cool lip -

20 பாக்கெட்டுக்கள், சட்டவிரோதமாக வைத்திருந்தவரை 16-15 மணிக்கு, மேற்கண்ட காரணத்தை சொல்லி உதவி ஆய்வாளர் கைது செய்து, 16-30 மணிக்கு அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால், எங்களது முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் 1-வதாக சாட்சி கையெழுத்து செய்தேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 என்றும், . அந்த கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஹான்ஸ்-40 பாக்கெட்டுக்கள், Cool Lip-20 பாக்கெட்டுகள், ஆகியவை தன்னிடம் காண்பிக்கப்படுவது தான் என்றும், அந்த சான்று பொருட்கள் சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பிறகு எதிரியை 17-30 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்தோம் என்றும், அதன் பிறகு அவரை நீதிமன்ற காவலுக்கு உதவி ஆய்வாளர் அனுப்புவதற்கு உதவி செய்தோம் என்றும், இது சம்பந்தமாக தன்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா. 3 திரு. பரணிநாதன் தனது சாட்சியத்தில், தான் தற்போது மரக்காணம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 28/12/2021ம் தேதி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு தான் மற்றும் தங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த முதல்நிலை காவலர் தேவசேனா, தலைமை காவலர் கருணாகரன் ஆகியோர்களுடன் போதைப் பொருட்கள் தடுப்பு சம்பந்தமாக கண்காணித்துக் கொண்டிருந்தபோது, விழுப்புரம் சாலாமேடு பகுதியை சேர்ந்த செல்வம் த/பெ.மண்ணாங்கட்டி, துரையரசன் நகர், என்பவரின் கடையில், அரசால்

தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வெள்ளை நிற சாக்கு பையில் அவரது கடைக்கு முன்பு வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார் என்றும், அவர் போலீசாராகிய தங்களை கண்டதும் ஓட முயற்சி செய்தார் என்றும், அவரைப் பிடித்து விசாரித்ததில் அவர் பெயர் செல்வம் வயது 48 த/பெ.மண்ணாங்கட்டி, துரை அரசன் நகர், சாலாமேடு, என்று சொன்னார் என்றும், அவர் அந்தப் பையில் 1) ஹான்ஸ் - 40 பாக்கெட்டுகள், Cool lip - 20 பாக்கெட்டுக்கள், சட்டவிரோதமாக வைத்திருந்தவரை 16-15 மணிக்கு, மேற்கண்ட காரணத்தை சொல்லி தான் கைது செய்து, 16-30 மணிக்கு அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால், மேற்சொன்ன முதல் நிலைக் காவலர் தேவசேனா, தலைமை காவலர் கருணாகரன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஹான்ஸ்-40 பாக்கெட்டுக்கள், Cool Lip-20 பாக்கெட்டுகள், ஆகியவை தன்னிடம் காண்பிக்கப்படுவது தான் என்றும், சாட்சி அதை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அந்த சான்று பொருட்கள் சா.பொ.1 வரிசை என்றும், . பிறகு எதிரியை 17-30 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்து பாராவிடம் ஒப்புவித்து, நிலைய குற்ற எண்.1473/2021 இ.த.ச. பிரிவுகள் 328, மற்றும் 24 (1), 6 COTPA ACT -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்றும், அந்த அச்சு முதல் தகவல் அறிக்கையை விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண் 1 அவர்களுக்கும், அதன் பிரதியை உயரதிகாரிகளுக்கும் முறையாக அனுப்பி வைத்தேன் என்றும், சாட்சிகள் கருணாகரன், தேவசேனா ஆகியோர்களை

விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்பு எதிரி செல்வம் த/பெ.மண்ணாங்கட்டி என்பவரை உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி, முறையாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், தன்னால் எதிரி செல்வத்தை பார்த்தால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும், சாட்சி ஆஜரில் உள்ள எதிரியை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், பின்பு வழக்கு சொத்தினை படிவம் - 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு முறையாக அனுப்பி வைத்தேன் என்றும், அந்த படிவம் - 95 அ.சா.ஆ.3 என்றும், பிறகு என் விசாரணை முடித்து மேற்படி எதிரி செல்வம் த/பெ.மண்ணாங்கட்டி என்பவர் மீது இ.த.ச. பிரிவுகள் 328, மற்றும் 24 (1), 6 COTPA ACT -ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், அனைத்து ஆவணங்களையும் முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

9) இருதரப்பு வாய்மொழி சாட்சியம் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகளையும் ஆய்வு செய்ததில், இந்த நீதிமன்றம் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாக கருதுவது என்னவெனில்,

(1) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட இதச பிரிவுகள். 328 உ/இ- 24(1) b COTPA Act 2003 , ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

10) <u>பிரச்சனை எண்.1-</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பு சாட்சிகள், இருதரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டன.

**11) <u>அரசு தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் -</u>**

(i) இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், கடந்த 28.12.2021ம் தேதி 16.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கே. பரணிநாதன் என்பவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் விழுப்புரம் சாலாமேடு , துரையரசன் நகரில் கண்காணித்த போது எதிரி செல்வம் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் மதிமயக்க பொருட்களை மனித உயிருக்கும், உள்ளுறுப்புக்கும் தீங்கு விளைவிக்கும் என தெரிந்தே அவரது பெட்டிக்கடையில் Hans – 40 பாக்கெட்டுக்கள் , Cool lip -20 பாக்கெட்டுக்கள் விற்பனைக்காக மறைத்து வைத்து குற்றம் புரிந்துள்ளார் என்றும், எனவே எதிரியின் செய்கையானது இதச பிரிவு. 328 உ/இ- 24(1) 6 COTPA Act 2003 , ன் படியும் தண்டிக்கத்தக்கது என்றும் வாதிட்டார்.

மேலும், இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 திரு. தேவசேனா ( தலைமை காவலர் ) , அ.சா.2. திரு . கருணாகரன் ( தலைமை காவலர்) , அ.சா.3 திரு . பரணிநாதன் ( உதவி ஆய்வாளர் ) புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எதிரியிடமிருந்து புகையிலை பொருட்கள் மற்றும் மது மயக்க

பொருட்கள் கைப்பற்றியது குறித்தும் அவரிமிடமிருந்து 1. Hans – 40 பாக்கெட்டுக்கள் 2. Cool lip 20 பாக்கெட்டுகள் கைப்பற்றியது குறித்தும் சான்று பொருள். 1 யை கைப்பற்றியது குறித்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், புலன் விசாரணை அதிகாரி ஆய்வு செய்தது குறித்தும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதன் மூலம் சான்று பொருள்.1 கைப்பற்றப்பட்டுள்ளது தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரியை மேற்படி குற்றச்சாட்டுக்களுக்காக தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**12) <u>எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் -</u>**

(i) இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் , இந்த வழக்கில் முறையாக புலன் விசாரணை செய்யப்படவில்லை என்றும், இந்த வழக்கில் தனி நபர்கள் யாருமே சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும், . கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக தனி நபர் எவரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் இந்த சங்கதி அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைந்துள்ளது என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா. 3 வரையிலான சாட்சிகள் அனைவருமே அரசு அலுவலர்கள் மற்றும் காவல் துறையை சார்ந்தவர்கள். எனவே முறையாக சான்று பொருள் கைப்பற்றப்படவில்லை என்றும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் குறுக்கு விசாரணையில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளது . அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைந்துள்ளது என்றும், வழக்கின் சான்றாவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், காவல்

துறை அதிகாரிகள் மட்டுமே சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்றும், எனவே எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசு தரப்பு சாட்சிகள் ஏற்புக்குரியதாக இல்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**13) கண்ணுற்ற மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளின் சாட்சியம் -**

இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில் இந்த வழக்கை கவனத்துடன் பரிசீலித்து பார்க்கும்போது இந்த வழக்கில் அ.சா.1 ஆக தலைமை காவலர் திரு. தேவசேனா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது சாட்சியத்தில்,

**" தான் தற்போது கண்டமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 28/12/2021ம் தேதி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக தான் பணிபுரிந்த போது, அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு தன்னுடன் பணி புரிந்த தலைமை காவலர் கருணாகரன், தாலுக்கா உதவி ஆய்வாளர் பரணிநாதன் ஆகியோர் சகிதம் விழுப்புரம் சாலாமேடு, துரை அரசன் நகர் பகுதியில், புகையிலை குட்கா பொருட்கள் தொடர்பாக கண்காணித்துக் கொண்டிருந்தபோது, செல்வம் என்பவரின் கடையில், அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வெள்ளை நிற சாக்கு பையில் அவரது கடைக்கு முன்பு வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார் என்றும், அவர் போலீசாராகிய தங்களை கண்டதும் ஓட முயற்சி செய்தார் என்றும், அவரைப் பிடித்து விசாரித்ததில் அவர் பெயர் செல்வம் வயது 48 த/பெ.மண்ணாங்கட்டி, துரை அரசன் நகர், சாலாமேடு, என்று சொன்னார் என்றும், அவர் அந்தப் பையில் 1)ஹான்ஸ் - 40**

பாக்கெட்டுகள், Cool lip - 20 பாக்கெட்டுக்கள், சட்டவிரோதமாக வைத்திருந்தவரை 16-15 மணிக்கு, மேற்கண்ட காரணத்தை சொல்லி உதவி ஆய்வாளர் கைது செய்து, 16-30 மணிக்கு அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால், தங்களது முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் 2-வதாக சாட்சி கையெழுத்து செய்தேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஹான்ஸ்-40 பாக்கெட்டுக்கள், Cool Lip-20 பாக்கெட்டுகள், ஆகியவை தன்னிடம் காண்பிக்கப்படுவது தான் என்றும், சாட்சி அதை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அந்த சான்று பொருட்கள் சா.பொ. 1 என்றும், பிறகு எதிரியை 17-30 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்தோம் என்றும், அதன்பிறகு அவரை நீதிமன்ற காவலுக்கு உதவி ஆய்வாளர் அனுப்புவதற்கு உதவி செய்தோம் என்றும், இது சம்பந்தமாக தன்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றும்"

சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** இந்த வழக்கில் அ.சா.2 ஆக மற்றொரு தலைமை காவலர் திரு. கருணாகரன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில்,

" தான் தற்போது திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 28/12/2021ம் தேதி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் தலைமை காவலராக நான் பணிபுரிந்த போது, அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு தன்னுடன் பணி புரிந்த முதல்நிலை காவலர் தேவசேனா, தாலுக்கா உதவி ஆய்வாளர் பரணிநாதன் ஆகியோர் சகிதம் விழுப்புரம்

சாலாமேடு, துரை அரசன் நகர் பகுதியில், புகையிலை குட்கா பொருட்கள் தொடர்பாக கண்காணித்துக் கொண்டிருந்தபோது, செல்வம் என்பவரின் கடையில், அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வெள்ளை நிற சாக்கு பையில் அவரது கடைக்கு முன்பு வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார் என்றும், அவர் போலீசாராகிய தங்களை கண்டதும் ஓட முயற்சி செய்தார் என்றும், அவரைப் பிடித்து விசாரித்ததில் அவர் பெயர் செல்வம் வயது 48 த/பெ.மண்ணாங்கட்டி, துரை அரசன் நகர், சாலாமேடு, என்று சொன்னார் என்றும், அவர் அந்தப் பையில் 1)ஹான்ஸ் - 40 பாக்கெட்டுகள், Cool lip - 20 பாக்கெட்டுக்கள், சட்டவிரோதமாக வைத்திருந்தவரை 16-15 மணிக்கு, மேற்கண்ட காரணத்தை சொல்லி உதவி ஆய்வாளர் கைது செய்து, 16-30 மணிக்கு அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால், எங்களது முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் 1-வதாக சாட்சி கையெழுத்து செய்தேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 என்றும், . அந்த கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஹான்ஸ்-40 பாக்கெட்டுக்கள், Cool Lip-20 பாக்கெட்டுகள், ஆகியவை தன்னிடம் காண்பிக்கப்படுவது தான் என்றும், அந்த சான்று பொருட்கள் சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பிறகு எதிரியை 17-30 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்தோம் என்றும், அதன்பிறகு அவரை நீதிமன்ற காவலுக்கு உதவி ஆய்வாளர் அனுப்புவதற்கு உதவி செய்தோம் என்றும், இது சம்பந்தமாக தன்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றும் "

சாட்சியம் அளித்துள்ளார்.

**15)** மேற்படி சாட்சிகளின் சாட்சியம் நம்பகதன்மை வாய்ந்ததா? என்பதை பரிசீலித்து பார்க்கும்போது இந்த வழக்கின் அ.சா.1 , அ.சா.2 இருவருமே காவல் துறை அதிகாரிகள் ஆவார்கள். காவல்துறை அதிகாரிகளின் சாட்சியம் ஏற்கத்தகுந்தது என்றாலும் அவர்களது சாட்சியம் மற்ற சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் உறுதிபடுத்தப்பட்டுள்ளதா ? என்பதை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் ஆகும்.

அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், " சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாக எங்களது காவல்துறை பொது நாட்குறிப்பில் இதுகுறித்து பதிவு செய்துள்ளோமா? என்றால் செய்தோம் என்றும், நாங்கள் காவல் துறையில் பாக்கெட் டைரி பராமரித்து வருவது வழக்கம் என்றால் சரிதான். என்றும், முதல் தகவல் அறிக்கை உதவி ஆய்வாளரால் எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்று தனக்கு ஞாபகம் இல்லை என்றும், அன்றைய தேதியில் உதவி ஆய்வாளர் எத்தனை மணிக்கு என்னை விசாரணை செய்தார் என்றால் சுமார் 6:30 மணி இருக்கும் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசர் காவல் நிலையத்தில் வைத்துதான் பிரின்ட் அவுட் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை என்றும், பக்கத்தில் இருந்த பிரவுசிங் சென்டரில் பிரின்ட் அவுட் எடுக்கப்பட்டது என்றும், அந்த பிரவுசிங் சென்டரின் பெயர் தனக்கு ஞாபகம் இல்லை என்றும்" முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட கருணாகரன் தனது குறுக்கு விசாரணையில், 28/12/2021 அன்று மதியம் 3 மணியிலிருந்து, இரவு 8 மணி வரை

பணியிலிருந்தேன் என்றும், இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை உதவி ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் என்றும், முதல் தகவல் அறிக்கை உதவி ஆய்வாளரால் எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை என்றும், என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசர் காவல் நிலையத்தில் வைத்துதான் பிரின்ட் அவுட் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை பக்கத்தில் இருந்த பிரவுசிங் சென்டரில் பிரின்ட் அவுட் எடுக்கப்பட்டது. அந்த பிரவுசிங் சென்டரின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி அ.சா.1, அ.சா.2 ஆகியோர் குறுக்கு விசாரணை சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாகவே அமைந்துள்ளது. மேலும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்பது இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அ.சா.1 தனிநபர் யாரும் புகார் அளிக்கவில்லை என்பதை ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே உண்மையில் எதிரியிடமிருந்து மதுமயக்க பொருள் கைப்பற்றப்பட்டதா? என்பதில் இந்த நீதிமன்றத்திற்கு ஐயமே எழுகிறது. தனிப்பட்ட சாட்சிகளை விசாரித்து அவர்கள் முன்னிலையில் மதி மயக்க பொருட்களை கைப்பற்ற முயற்சி எடுக்காதது ஏன்? என்பதற்கு காவல்துறை தரப்பில் உரிய விளக்கம் அளிக்கப்படவில்லை. இந்த சங்கதி அரசு தரப்பு வழக்கிற்கு எதிரான ஒரு எதிர் மறை யூகத்தையே ஏற்படுத்துகிறது. இந்த வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் அனைவரும் காவல்துறை சாட்சிகள் என்ற நிலையில், மேற்படி அ,சா.1 , அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் முரண்பாடுகள் உள்ள நிலையிலும், தனிப்பட்ட சாட்சிகளை

முன்னிலைப்படுத்தப்படாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

**<u>17) புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் மூலம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ளதா?</u>**

(i) இந்த வழக்கில் அ.சா. 3 ஆக புலன் விசாரணை அதிகாரியான காவல்உதவி ஆய்வாளர் பரணிநாதன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில்,

> " தான் தற்போது மரக்காணம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 28/12/2021ம் தேதி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு தான் மற்றும் தங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த முதல்நிலை காவலர் தேவசேனா, தலைமை காவலர் கருணாகரன் ஆகியோர்களுடன் போதைப் பொருட்கள் தடுப்பு சம்பந்தமாக கண்காணித்துக் கொண்டிருந்தபோது, விழுப்புரம் சாலாமேடு பகுதியை சேர்ந்த செல்வம் த/பெ.மண்ணாங்கட்டி, துரையரசன் நகர், என்பவரின் கடையில், அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வெள்ளை நிற சாக்கு பையில் அவரது கடைக்கு முன்பு வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார் என்றும், அவர் போலீசாராகிய தங்களை கண்டதும் ஓட முயற்சி செய்தார் என்றும், அவரைப் பிடித்து விசாரித்ததில் அவர் பெயர் செல்வம் வயது 48 த/பெ.மண்ணாங்கட்டி,

துரை அரசன் நகர், சாலாமேடு, என்று சொன்னார் என்றும், அவர் அந்தப் பையில் 1)ஹான்ஸ் - 40 பாக்கெட்டுகள், Cool lip - 20 பாக்கெட்டுக்கள், சட்டவிரோதமாக வைத்திருந்தவரை 16-15 மணிக்கு, மேற்கண்ட காரணத்தை சொல்லி தான் கைது செய்து, 16-30 மணிக்கு அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால், மேற்சொன்ன முதல் நிலைக் காவலர் தேவசேனா, தலைமை காவலர் கருணாகரன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஹான்ஸ்-40 பாக்கெட்டுக்கள், Cool Lip-20 பாக்கெட்டுகள், ஆகியவை தன்னிடம் காண்பிக்கப்படுவது தான் என்றும், சாட்சி அதை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், அந்த சான்று பொருட்கள் சா.பொ.1 வரிசை என்றும், . பிறகு எதிரியை 17-30 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்து பாராவிடம் ஒப்புவித்து, நிலைய குற்ற எண்.1473/2021 இ.த.ச. பிரிவுகள் 328, மற்றும் பிரிவுகள். 24 (1), 6 COTPA ACT -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்றும், அந்த அச்சு முதல் தகவல் அறிக்கையை விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண் 1 அவர்களுக்கும், அதன் பிரதியை உயரதிகாரிகளுக்கும் முறையாக அனுப்பி வைத்தேன் என்றும், சாட்சிகள் கருணாகரன், தேவசேனா ஆகியோர்களை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்பு எதிரி

செல்வம் த/பெ.மண்ணாங்கட்டி என்பவரை உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி, முறையாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், தன்னால் எதிரி செல்வத்தை பார்த்தால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும், சாட்சி ஆஜரில் உள்ள எதிரியை சரியாக அடையாளம் காண்பித்தார் என்றும், பின்பு வழக்கு சொத்தினை படிவம் - 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு முறையாக அனுப்பி வைத்தேன் என்றும், அந்த படிவம் - 95 அ.சா.ஆ.3 என்றும், பிறகு என் விசாரணை முடித்து மேற்படி எதிரி செல்வம் த/பெ.மண்ணாங்கட்டி என்பவர் மீது இ.த.ச. பிரிவுகள் 328, மற்றும் 24 (1), 6 COTPA ACT -ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், அனைத்து ஆவணங்களையும் முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும்”,

சாட்சியம் அளித்துள்ளார் .

(ii) மேற்படி அ.சா. 3 தனது சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில், “ இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது நான் தான் என்றும், இந்த வழக்கின் விசாரணை அதிகாரியும் நான் தான் என்றால் சரிதான் என்றும், இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு பார்வை மகசர் தயார் செய்தேனா? என்றால், இல்லை என்றும், இந்த வழக்கில் என்னுடன் உள்ள காவலர்களை தவிர, தனி நபர்களை சாட்சிகளாக விசாரணை செய்தேனா? என்றால் இல்லை என்றும், நான் தயார் செய்த முதல் தகவல் அறிக்கையில், இ.த.ச.பிரிவுகளும், COTPA ACT பிரிவுகளும் வருகிறது என்றால் சரிதான். நான் கைப்பற்றியதாக சொல்லப்படும்

புகையிலைப் பொருட்கள் HANS மற்றும் Cool lip ஆகியவை விஷத்தன்மை உடையதா? என்பதை கண்டறிய தடயவியல் துறைக்கு அனுப்பி வைத்துள்ளேனா? என்றால், இல்லை. 24(1) COTPA ACT நிரூபணம் செய்ய அங்கே அருகாமையில் வீடுகளோ அல்லது கடைகளோ மற்றும் கல்வி நிறுவனங்களோ உள்ளது என்பதை காண்பிக்க நான் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். இந்த வழக்கில் மேற்படி அ.சா. 3 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களில் நச்சு பொருட்கள் உள்ளதா? என்பதை கண்டறிய அதனை பகுப்பாய்வு செய்ய ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பாததற்கு எந்த விளக்கமும் அரசு தரப்பில் அளிக்கப்படவில்லை. மேலும் சம்பவ இடம் பொது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்ற நிலையில் தனிப்பட்ட நபர்களையோ, காவல்துறையை சாராத நபர்களை விசாரிக்கவில்லை என்பதற்கு காவல்துறை தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

18) ஒரு வழக்கில் புகார் அளித்த நபர் புலன் விசாரணை அதிகாரியாக இருக்கலாம் என்பதில் இந்த நீதிமன்றத்திற்கு மாற்று கருத்து எதுவும் இல்லை. மேலும் இது போன்ற வழக்குகளில் காவல்துறை சாட்சியங்களை வைத்து மட்டுமே தண்டனை வழங்கலாம். ஆனால் அந்த சாட்சியங்கள் நம்பிக்கை தரும் வகையில் இருக்க வேண்டும் என்பது நன்கு அமைந்துவிட்ட சட்ட விதி ஆகும். எனினும் அவ்வாறு இந்த வழக்கில் சாட்சிய , சான்றாவணங்கள் தெளிவாக உள்ளதா? என்று பார்க்கும்போது

இந்த வழக்கில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் சான்று பொருள்.1 கைப்பற்றப்பட்டதாக எந்த வாதமும் முன் வைக்கப்படவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் எதிரியால் அளிக்கப்படாததற்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேற்படி எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களில் நச்சு உள்ளதா? என்பதை அறிய தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்படவில்லை. இந்த முரண்பாடுகளை புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும், மேற்படி அ.சா. 1, அ.சா.2 இருவருமே தங்களது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளனர். இந்த வழக்கில் புலன் விசாணை அதிகாரி புலன் விசாரணை செய்தது குறித்தும், சான்றுபொருட்களை கைப்பற்றியது குறித்தும், சான்று பொருட்களை நீதிமன்றத்திற்கு அனுப்பியது குறித்தும், முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே உண்மையில் எதிரியிடமிருந்து சான்றுபொருள் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா? என்பதில் இந்த நீதிமன்றத்திற்கு சந்தேகமே எழுகிறது. அந்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுவிக்கலாம் என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்புக்குரியதாகவே உள்ளது. மேலும், இது போன்ற வழக்குகளில் தனிப்பட்ட சாட்சிகள் இல்லாமல் தண்டனை வழங்கும்போது அந்த வழக்கின் நம்பக தன்மைக்கு கேடு விளைவித்து விடக்கூடும் என்று எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாதம் ஏற்புக்குரியதாகவே உள்ளது.

19) எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், கடந்த 28.12.2021 ம் தேதி 16.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கே. பரணிநாதன் என்பவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் விழுப்புரம் சாலாமேடு , துரையரசன் நகரில் கண்காணித்த போது எதிரி செல்வம் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் மதிமயக்க பொருட்களை மனித உயிருக்கும், உள்ளூறுப்புக்கும் தீங்கு விளைவிக்கும் என தெரிந்தே அவரது பெட்டிக்கடையில் Hans – 40 பாக்கெட்டுக்கள் Cool lip -20 பாக்கெட்டுக்கள் விற்பனைக்காக மறைத்து வைத்து குற்றம் புரிந்துள்ளார் என்றும், எனவே எதிரியின் செய்கையானது இதச பிரிவு. 328 உ/இ- 24(1) 6 COTPA Act ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் இவ்வாறாக பிரச்சனை எண். 1 க்கு தீர்வு காண்கிறது.

முடிவாக, எதிரி மீது இதச. பிரிவு. 328 உ/இ - 24(1) , 6 COTPA Act ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு. 258 (1) (BNSS) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். இவ்வழக்கில் எதிரிக்கு ஏற்பட்டுள்ள பிணைமுறிகள் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் இரத்தாகும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது

சான்று பொருள்.1 ( Hans Pockets. 40 Nos. & Cool lip - 20 Nos). பயனற்றது என்பதால் அதனை மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

RAJASIMMAVARMAN S Digitally signed by RAJASIMMAVARMAN S Date: 2026.03.30 10:33:39 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

**அரசுத்தரப்பு சாட்சிகள் -**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு. தேவசேனா ( தலைமை காவலர் ) |
| 2 | அ.சா.2 | திரு. கருணாகரன் ( முதல் நிலை காவலர் ) |
| 3 | அ.சா.3 | திரு, பரணிநாதன் ( உதவி ஆய்வாளர் ) |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள் -**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 28.12.2021 | கைப்பற்றுதல் மகசர் . |
| 2 | அ.சா.ஆ.2 | 28.12.2021 | முதல் தகவல் அறிக்கை . |
| 3 | அ.சா.ஆ.3 | 28.12.2021 | படிவம். 95. |

**அரசு தரப்பு சான்று பொருள் . சி.பி. 94 /2025 .**

1. சா.பொ.1 ... Hans Pockets. 40Nos.

2. சா.பொ.2 ... Cool lip - 20 Nos.

**எதிரி தரப்பு சாட்சிகள்** - இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்** - - இல்லை.

<table>
<tr><th colspan="5"><u>Case Summary</u></th></tr>
<tr><th>SL.No.</th><th>Description</th><th colspan="3">Details</th></tr>
<tr><td>1</td><td>எதிரி அடைப்பு காவலில் இருந்த காலம் .</td><td colspan="3">28.12.2021 முதல் 16.02.2022 வரை</td></tr>
<tr><td>2</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான நாள்</td><td colspan="3">28.01.2022</td></tr>
<tr><td>3</td><td>வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட நாள்</td><td colspan="3">27.10.2025</td></tr>
<tr><td>4</td><td>எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள்</td><td colspan="3">12.01.2026</td></tr>
<tr><td>5</td><td>வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுக்களும் அவற்றின் முடிவும் (கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழான மனு நீங்கலாக )</td><td colspan="3">NIL</td></tr>
<tr><td rowspan="4">.</td><td rowspan="4">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சி</td><td>மு.வி</td><td>கு.வி</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 7 | எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் வினவப்பட்ட நாள். | 17.03.2026 |
| 8 | எதிரி தலைமறைவாக இருந்த காலம் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜரான / ஆஜர்படுத்தப்பட்ட காலம். | NIL |
| 9 | மேல் நீதிமன்றங்கள் வழங்கிய ஸ்டே உத்தரவு மற்றும் அதன் முடிவும். | இல்லை |

RAJASIMMAVARMAN S

Digitally signed by RAJASIMMAVARMAN S
Date: 2026.03.30 10:33:53 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,

(விரைவு நீதிமன்றம்),

விழுப்புரம்.

o

அசல் / நகல் தீர்ப்பு

அமர்வு வழக்கு எண். 296/2025

நாள். 18.03.2026.